# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதிவிசேஷமானது

අංක 1798/43 - 2013 පෙබරවාරි 20 වැනි බදාදා - 2013.02.20

*1798/43 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : 3/2/1/7/253/4.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2002/டீ/183.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில், கட்டுநாயக்க - சீதுவை நகர சபை எல்லைக்குள், பிரிவு இல. 2, உதுரு குரண கிராமத்தில் அமைந்துள்ள கம்பஹா சிரேஷ்ட நில அளவை அதிகாரியால் தயாரிக்கப்பட்ட, இல. மு. வ. கம் 3477 என்ற வரைபடத்தில் 0.0023 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட அம்பகஹவத்தை எனும் காணித்துண்டின் விபரம் :

**துண்டு இல. 01**
காணியின் பெயர் : அம்பகஹவத்தை ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : எஸ். சாந்தி தனபால, கந்தெகொட, பத்தேகம வீதி, கோனபீனுவல ; விஸ்தீரணம் : 0.0023 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு கட்டான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலகம்,
கட்டான,
2013.02.06.

03 - 408

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : என்/டிஎஸ்/எல்/01/ஏசிகியு/பிரிகே/05 (111).

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணியின் விபரம் :

அம்பாறை மாவட்டத்தில், நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவில், நிந்தவூர் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்டுள்ள பிபி. அம். 3943 ஆம் இலக்க 2012.10.23 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.1251 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுள்ளதுமான பொட்டக்குளம் என அழைக்கப்படும் ஒரு காணித்துண்டின் எல்லைகள் :

**துண்டு இல. 1 - பொட்டக்குளம், நிந்தவூர் 24 ஆம் குறிச்சி - விஸ்தீரணம் : 0.1251 ஹெக்டயார்**
வடக்கு : பிபி அம் 2244 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 4 ; கிழக்கு : ரிபி 86012 (எம். எம். அபுசாலி என்பவர் உரிமை கோரும்

பொட்டக்குளம் வயல்) ; தெற்கு : ரிபி 86012 (எம். எம். அபுசாலி என்பவர் உரிமை கோரும் பொட்டக்குளம் வயல்) உம் பிபி அம் 3088 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 ; மேற்கு : பிபி அம் 3036 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருமதி ஆர். யூ. அப்துல் ஜலீல்,
பிரதேச செயலாளர்,
நிந்தவூர்.

பிரதேச செயலகம்,
நிந்தவூர்,
2013.02.08.

03 - 409